**செ. கு. எண்:062** **நாள்: 27.06.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 27.6.2019</u>

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கரும்பூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கலியபெருமாள் என்பவரின் மகன் திரு. சேட்டு என்பவர் விவசாய நிலத்திற்கு சென்ற போது அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், பழனி கோட்ட தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மின் பாதை ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. கருப்பணகவுண்டர் என்பவரின் மகன் திரு. தெய்வராஜ் என்பவர் களப்பணியில் ஈடுபட்டிருந்த போது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், புத்திககவுண்டம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. குணசேகரன் என்பவரின் மகன் திரு. ராமச்சந்திரன் என்பவர் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், நமச்சிவாயபுரம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி தேன்மொழி என்பவரின் கணவர் திரு. வேல்முருகன் என்பவர் தென்னை மரத்தின் மட்டைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த போது, தென்னை மட்டை உயர்மின்னழுத்த கம்பியின் மீது உரசி மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கண்டாச்சிபுரம் வட்டம், ஏமப்பேர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பூங்கான் என்பவரின் மகன் திரு. பிரபு என்பவர் வயல் வெளியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டிவனம் வட்டம், ஆசூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகன் என்வரின் மனைவி திருமதி உமாபதி என்பவர் பூந்தோட்டத்திற்கு சென்ற போது, எதிர்பாராதவிதமாக மின் கம்பியை தொட்டதில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், தடாகம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சக்கரை என்பவரின் மகன் திரு. செந்தில்குமார் என்பவர் மின் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், குருகப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு குப்புசாமி என்பவரின் மகன் திரு. ரவி என்பவர் கன மழை காரணமாக அறுந்து கிடந்த மின்கம்பியை, எதிர்பாராத விதமாக மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம் மற்றும் நகரம், திரு. பால்பாண்டி என்பவரின் மனைவி திருமதி பரமேஸ்வரி என்பவர் கழிப்பறைக்குச் செல்லும் மின்வயரை எதிர்பாராத விதமாக மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், ஏ.கொக்குளம் உள்வட்டம், கே.பாறைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. மொக்கச்சாமி என்பவரின் மனைவி திருமதி அமராவதி என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை, கடக்க முற்பட்ட போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மேற்கு வட்டம், மேல்மதுரை கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகக்கவுண்டர் என்பவரின் மகன் திரு. கருணாகரன் என்பவர் அறுந்து கிடந்த கம்பியை தொட்டதில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், உப்பிலியாபுரம், ஆர். புதுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னதம்பி என்பவரின் மகன் திரு. நல்லையன் என்பவர் விவசாய நிலத்திற்கு சென்ற போது, அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சிறுகிணர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகன் என்பவரின் மகன் திரு. கார்த்திக் என்பவர் கட்டுமான பணியில் ஈடுபட்டிருந்த போது, அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காங்கயம் வட்டம், வெள்ளகோவில் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணி என்பவரின் மகன் திரு. வீரமணி மின்பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பெரியபுலியூர் கிராமம், பூலாம்பாளையம் என்னும் இடத்தில் கம்பம் நடும் பணியில் ஈடுபட்டிருந்த திரு. சீரங்க கவுண்டர் என்பவரின் மகன் திரு. வெள்ளியங்கிரி என்பவர் எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தேவதானப்பட்டி கெங்குவார்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரபத்திரன் என்பவரின் மனைவி திருமதி பஞ்சவர்ணம் என்பவர் விவசாய நிலத்திற்கு சென்ற போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டம், மன்னார்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரத்தினவேல் என்பவரின் மகன் திரு. சதாசிவம் என்பவர் மின்மாற்றியில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த **17** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த **17 நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**